


நகர் ஊரமைப்புத் துறை (DTCP)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்,

வேலப்பநாயக்கன்வலசு ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், வேலப்பநாயக்கன்வலசு ஊராட்சி மற்றும் சேனாபதிபாளையம் கிராமம், ரீ.ச.எண் - 1157/A8, 1157/A30A -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

இணையதள விண்ணப்ப எண் : ZJDP5FD3 /2025 நாள் : 23.04.2025

அளவு : 1:500 (1cm = 5cm)

N
W E
S

குறிப்பு :

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 0.9345 ஏக்கர் (அ) 3782.00 சதுர மீட்டர்

ஒதுக்கிய மனைகள் : 21

மனைப்பிரிவின் எல்லை .....

நிலையிலுள்ள சாலை/அனுகு சாலை .....

பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை) :

I) மனைப்பிரிவின் சாலைகள் மற்றும் மூலைமுடக்குகளின் பரப்பு : 1054.01 சமீ

II) பூங்கா :

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x 10% (3782.00 - 1054.01 = 2727.99) x 10% = 272.79 சமீ

ii) TNCDBR -2019 விதி 49(i)-ன் படி பூங்கா (OSR 10%) பரப்பு 272.80 சதுர மீட்டருக்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பு தொகை ரூ.1,63,680 யினை மனுதாரரால் உரிய கணக்கு தலைப்பில் 14.05.2025 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

III. பொது உபயோகம் (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பில் சாலைப்பரப்பு நீங்கலாக

A) LOCALBODY -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (3782.00 - 1054.01) x 0.5% = 13.63 சமீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 21.56 சமீ (0.79 %)

B) TANGEDCO -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (3782.00 - 1054.01) x 0.5% = 13.63 சமீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 27.77 சமீ (1.01 %)

கட்டட வரம்பு:

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5 மீ விடப்படல் வேண்டும்

9.0மீக்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0 மீ விடப்படல் வேண்டும்

மூலை முடக்கு:

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5 மீ x 1.5 மீ விடப்படல் வேண்டும்.

12.0மீக்கு மேல் அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5 மீ x 4.5 மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்-18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்-04.02.2019, (ம) அரசாணை எண்-16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்-31.01.2020-ன் படி, மனைப்பிரிவு சாலைகள் (மூலை முடக்குகள் உட்பட) மற்றும் LOCALBODY -ற்கு பொது உபயோகம் ஆகியன உள்ளாட்சிக்கும் மற்றும் TANGEDCO -ற்கு பொது உபயோகம் TANGEDCO/உள்ளாட்சிக்கு தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் -181, வீட்டுவசதி (ம) நன்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020, மற்றும் அரசாணை எண் -141, வீட்டுவசதி (ம) நன்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022 ஆகியவற்றில் தெரிவித்துள்ளவாறு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகள் மனுதாரரால் அமைக்கப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்படுத்தியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகலினை மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தலில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் கிரையப்பத்திரம்/குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரப்பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று சரிபார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த ஒரு நபரும் விண்ணப்தாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனிப்பட உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரால் தார் சாலை அமைக்கப்பட்டு (BDO/UE) வட்டார வளர்ச்சி அலுவலர் / யூனியன் பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

SWP / DTCP / TIRUPPUR / LAYOUT APPROVAL NO. : 86 / 2025

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.